1968 ஆகஸ்டு 22]

பக்கத்திலேயே அணு மின் நிலையம் இருந்து தீர வேண்டிய அவசியமில்லை. அதை நம்பித்தான் கல்பாக்கம் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே அங்கிருந்து உலோகங்களைக் கொண்டு வந்து பயன்படுத்தலாம். குறைந்தது 5, 10 மைல் அளவில் சுற்று வட்டாரத்தில் வேறு கிராமங்கள் இருக்கக் கூடாது என்று கணக்கிட்டு, சென்னைக்கு அருகிலே இருப்பதாலே மின் இணைப்புகளுக்கு பல்வேறு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் கணக்கிட்டுத் தான் கல்பாக்கம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. உலோகங்களை மணவாளக்குறிச்சியிலிருந்து வரவழைத்துக்கொள்ளலாம்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, ஆளியார் மின்சார பவர் ஹௌஸ்கள் வேலை செய்ய ஆரம்பித்து விட்டனவா? எத்தனை பவர் ஹவுஸ்கள் ஆரம்பிக்கப்பட்டு வேலை நடக்கின்றன? இது சம்பந்தமாக கேரளாவுடன் ஏதாவது ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய முழு விவரம் இல்லை.

தெலுங்கு ஆசிரியர்கள்

* 86 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நம் ராஜ்யத்திலும், ஆந்திர ராஜ்யத்திலும் தெலுங்கு உபாத்தியாயர் பயிற்சி பெற்று வரும் ஆசிரியர்களில், நமது ராஜ்யத்தில் பயிற்சி பெற்று வருபவர்களுக்குத்தான் முதலில் உபாத்தியாயர் வேலை கொடுக்கவேண்டுமென்று உத்திரவு உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்பொழுது நடைமுறையிலே இங்கே தமிழகத்தில் இருக்கக்கூடிய தெலுங்கு பயிற்சிப் பாடசாலைகளிலே இடம் கிடைக்காத காரணத்தாலே ஆந்திராவிலே உள்ள பயிற்சி பாடசாலைகளுக்குச் செல்லுகிறார்கள். ஆனால் இந்த ராஜ்யத்திலே இருக்கக்கூடிய பயிற்சிப் பள்ளிகளிலே தேர்ச்சி பெறக்கூடியவர்களை மட்டும் ஆசிரியர் உத்தியோகங்களுக்குச் சேர்த்துக் கொண்டு ஆந்திராவிலேயிருந்து பயிற்சி பெற்று வரக்கூடியவர்களைச் சேர்ப்பது இல்லை. இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பாகுபாடு அற்ற விதத்திலே சேர்க்க வேண்டுமென்று உத்தரவு போடப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன், அப்படிப்பட்ட நிலை இல்லை என்று. இங்கே இருப்பவர்களைச் சேர்ப்பது, அங்கே இருப்பவர்களைச் சேர்ப்பது அல்ல என்பது இல்லை. தேவைக்கேற்ப ஆந்திர மாநிலத்திலிருந்து வருபவர்களையும் சேர்க்கத்தான் வேண்டும். ஹோசூரிலே ஒரு பள்ளி இருக்கிறது. அங்கு தெலுங்கு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆந்திரப் பிரதேசத்திலே படித்து நன்றாகப் பயிற்சி பெற்று வருபவர்களைச் சேர்த்துக்

கொள்ள வேண்டாம் என்று உத்தரவு எதுவும் இல்லை. அப்படி வருகிறவர்களையும் சேர்த்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, at present we have got only one Telugu training school at Hosur. This year we have received nearly 1,000 applications for 48 seats in respect of the higher grade and 48 seats in respect of the secondary grade. Moreover, students who are coming from Tiruttani and other areas have to cover long distances and also climatic conditions differ. So, taking all these into consideration, will the Government try to open one more Telugu training school at Tiruttani or Tiruvallur ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்பொழுது ஹோசூரிலே இரண்டு முதலாண்டு பிரிவுகள் உள்ளன. ஒன்று ஆணுக்கு, மற்றொன்று பெண்ணுக்கு. ஐம்பது, ஐம்பது இடங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது ஆண்டு பிரிவுகள் செகண்டரி கிரேடிற்கு இரண்டும், எலிமெண்டரி கிரேடிற்கு ஒன்றும் இருக்கின்றன. மாநிலத்தில் தேவை அதிகமாக இருந்து, பயிற்சி பெறுகிறவர்கள் குறைவாக இருந்தால் வேறு பள்ளியை ஆரம்பிப்பதோ அல்லது பள்ளிகளை அதிகரிப்பதோ, அதைப்பற்றி ஆராயலாம். கனம் உறுப்பினரவர்கள் கூறிய கருத்தை மனத்தில் கொண்டு ஆராயப்படும்.

DR. H. V. HANDE : Sir, there is a scare among the Telugu-speaking people of the Madras State that there is a possibility of winding up of the Telugu section in certain Telugu schools and also the prospects that the Telugu people getting chances in Telugu Training Schools are also dwinding. So, will the Hon. Minister give a categorical assurance that the interests of the Telugu-speaking students as well as the Telugu teachers will be completely looked after by this Government ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, முதலிலே கூறியபடி 15 மாணவர்களுக்கு மேலாக அந்த மொழியைக் கொண்டு நாங்கள் படிக்க விரும்புகிறோம் என்று கூறி ஆசிரியர்கள் வேண்டுமென்று கேட்டால் அதற்கு வாய்ப்பு தர அரசு தயாராக இருக்கிறது. சிலபல பள்ளிகளிலே இரண்டாவது மொழியாக படிக்க தெலுங்கு இருக்கிறது. குறிப்பிட்ட எண்ணிக்கைக்குமேல் மாணவர்கள் வந்தால் அந்தப் பள்ளிகளிலே வசதிகள் செய்து தர அரசு முன்வரும்.

THIRU K. VINAYAKAM : Sir, are the Government aware of the fact that the Telugu teachers in our border areas are fast taking to learning Tamil and they are getting adjusted in those areas with the result there is no demand—or the demand is dwindling—for the employment of Telugu teachers ? Even those who were trained in the Training School at Hosur feel it very difficult to get employment in the Telugu schoole in the border areas.

1968 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட சூழ்நிலை வளர்ந்து வருவது வரவேற்கத்தக்கது. அந்தந்த இடத்திற்குத் தகுந்தாற்போல் தாய்மொழியோடு வட்டார மொழியையும் கற்று வருவது நல்லதுதான். ஆசிரியர்கள் பாதிக்கப்படுவதாகச் சொன்னார்கள். பாதிக்கப்படாமல் இருக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அதை எடுக்க அரசு கவனிக்கும்.

நெசவாளர்களுக்கு இலவச வீட்டுமனை

* 87 வினா.—**திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வீடில்லாத நெசவாளர் குடும்பங்களுக்கு இலவசமாக மனைகள் வழங்க அரசாங்க திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, அரிசனங்களுக்கு இலவசமாக மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுப்பது மாதிரி வருமானத்தில் குறைந்தவர்களுக்கு, வருஷத்திற்கு ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இலவசமாக மனைகளை வாங்கிக் கொடுக்க திட்டம் இருப்பதாகக் கூறப்படுகிறதே, உண்மையா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கேள்வியைப் பொறுத்து அது எழவில்லை. அப்படிப்பட்ட திட்டம் கூட்டுறவு நெசவாளர்களைப் பொறுத்து இல்லை.

திரு. முனு ஆதி : தலைவரவர்களே, அரசினர் புறம்போக்கு நிலங்களையாவது இந்த வீடில்லாமல் தவிக்கும் நெசவாளர்கள் குறிப்பிட்ட இடங்களைக் கேட்டால் பட்டா வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்பொழுது பெரும்பாலும் ஆங்காங்கு இருக்கிற அரிசன மக்களுக்குத்தான் அந்த புறம்போக்கு நிலங்களிலே இட வசதிக்கு ஒதுக்கப்படுகிறது. அதிலேகூட எல்லோருக்கும் ஒதுக்கித் தர முடியவில்லை. நெசவாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் தர வேண்டுமென்ற பிரச்சினை இப்பொழுது இல்லை. அது என்னுடைய இலாக்காவிலே இல்லை. தனிக்கேள்வி போட்டால் அதற்குரிய இலாக்காவிலே ஆராய்ந்து விடையளிப்பார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : சார், நெசவாளர்களுக்கு அரசாங்கம் வீடு கட்டிக் கொடுப்பதாகத் திட்டம் இல்லை என்கிறார்கள். அவர்கள் மிகவும் பின்தங்கியவர்களாகக் காட்சியளிக்கிறார்கள். அவர்கள் வருமானத்தை உத்தேசித்தாவது சர்க்கார் இனிமேலாவது திட்டமிட்டு அவர்களுக்கு வீட்டு மனை கட்டிக் கொடுக்கக் கூடிய நிலைமைகளை உருவாக்கிக் கொடுப்பார்களா ?